பக்கங்கள் 17+ 02

# மாலை முரசு

## 19 வயது இளைஞர் சுட்டுப் படுகொலை

### கல்கிஸையில் பயங்கரம்



கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல் கிஸை கடற்கரை வீதி சந்தியில் இன்று அதிகாலை 02▶

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 22 திங்கட்கிழமை 05.05.2025 | அதிர்வு 275

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வியட்நாம் ஜனாதிபதியால் அநுரவுக்கு அமோக வரவேற்பு



### இரு தரப்பு பேச்சுகளும் முன்னெடுப்பு

வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங்கினால் இன்று அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இன்று முற்பகல் வியட்நாம் ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, முப்படைகளின் மரியாதையுடன் வரவேற்கப்பட்டதுடன், முப்படைகளின் அணிவகுப்பையும் பார்வையிட்டார். 04▶





# யாழ்ப்பாணத்தில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள்!

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து யாழ். மாவட்டத்துக்கான அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லும் பணிகள் இன்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் 517 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன. 02▶

# யாழ். மாவட்டத்தில் 17 சபைகளுக்கு 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் போட்டி

(எஸ்.நிதர்ஷன்)

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு மாநகர சபை, 3 நகர சபைகள் மற்றும் 13 பிரதேச சபைகள் என்ற கட்டமைப்பில் உள்ளூர் அதிகார சபைகள் இருக்கின்றன.

இந்தச் சபைகளில் உள்ள 243 வட்டாரங்களில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து போட்டியிடுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் மக்கள் தமது வாக்குகளை அளிப்பதற்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் தேர்தல் கடமைகளுக்காக 6 ஆயிரத்து 320 அதிகாரிகளும், 1048 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையாற்றவுள்ளனர்.

இதேநேரம் யாழ். மாவட்டத்தில் 243 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

இலங்கை போக்குவரத்துச் சபையின் 50 பஸ்களும், 143 தனியார் பஸ்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இடம்பெயர்ந்து பருத்தித்துறை பிரதேசத்தில் வசிக்கும் வாக்காளர்களை ஏற்றி வருவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்குக் கடற்படையினர் படகு போக்குவரத்து ஒழுங்களைச் செய்துள்ளனர்.

## 19 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தெஹிவளை, ஓர்பன் பிளேஸ் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படு காயமடைந்த இளைஞர், களுபோவிலவில் உள்ள கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

மேலும், இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன், தேர்தல் கடமைக்காக இணைக்கப்பட்ட சுகாதார அமைச்சின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் பொ.தயானந்தன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபரும் (காணி) நலனோம்பல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான க. சிறீமோகனன் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# வவுனியாவில் வாக்குப் பெட்டிகள் அனுப்பிவைப்பு!

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் உள்ளூ ராட்சி சபைத் தேர்தலுக்கான வாக் குப் பெட்டிகள் பொலிஸாரின் பாது காப்புடன் இன்று அனுப்பி வைக்கப் பட்டன.

நாளை இடம்பெறவுள்ள உள்ளூ ராட்சி சபைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் வவுனியா மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள 154 வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய தேவையான ஆவணங்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் இருந்து காலை முதல் அனுப்பி வைக் கப்பட்டன.

பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் இந்த நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டது.






# வவுனியாவில் 5 சபைகளுக்கு 1,731 பேர் போட்டி

## 1,605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில்; மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் 1605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதி பருமான பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “சுதந்திரமானதும்,



நேர்மையானதுமான தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் ஒரு மாநகர சபை மற்றும் நான்கு பிரதேச சபைக ளுக்காக 103 பேர் தெரிவு செய்யப் பட்டவுள்ளனர். இதற்காக 1731 பேர் போட்டியிடவுள்ளனர். ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 293 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 154 வாக் களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள் ளன. 1605 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டுளனர். 1,307 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கட மையில் ஈடுபட்டுள் ளனர்.” – என்றார்.



# ஹனோயில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்தில் அநுர மலர் அஞ்சலி

வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று முற்பகல் ஹனோயில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்துக்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் ஜனாதிபதி மாளிகையில் உள்ள ஹோ சி மின் நினைவிடத்தை பார்வையிட்ட அநுரகுமார, சுதந்திரப் போராட்டத் தலைவரும் சுதந்திர வியட்நாமின் முதல் ஜனாதிபதியுமான ஹோ சி மின் இன் அஸ்தி அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் கலந்துகொண்டார்.













## வியட்நாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்பு நிகழ்வில், இரு தலைவர்களும் இலங்கை மற்றும் வியட்நாமின் தேசிய கீதங்களுக்கு மரியாதை செலுத்தினர்.அதனைத் தொடர்ந்து இரு நாடுகளின் பிரதிநிதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து, இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தச் சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான முன்னேற்ற மீளாய்வு, எதிர்கால ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

இந்தப் பயணத்தின் மூலம் அரசியல் நம்பிக்கையை மேம்படுத்துவதோடு, இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் நடைமுறை மற்றும் செயற்திறன்மிக்க ஒத்துழைப்பை மேலும் ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

1970 ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியதிலிருந்து வியட்நாமும் இலங்கையும் வலுவான மற்றும் தொடர்ச்சியான உறவுகளைப் பேணி வருகின்றன.

இலங்கை மற்றும் வியட்நாமின் வருடாந்த இருதரப்பு வர்த்தகம், முக்கியமாக ஏற்றுமதிகள், சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை எட்டியுள்ளது.

எதிர்வரும் வருடங்களில் இருதரப்பு வர்த்தகத்தை 01 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதை இரு தரப்பினரும் இலக்காகக் கொண்டுள்ளனர்.

இந்த ஆண்டு வியட்நாமும் இலங்கையும் இராஜதந்திர உறவுகளின் 55 ஆவது ஆண்டைக் கொண்டாடும் வேளையில், பரஸ்பர நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை பயன்படுத்தி உறவுகளை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் தயாராக உள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் விஜயம், வியட்நாமுடனான பாரம்பரிய நட்புறவுக்கான இலங்கையின் வலுவான அர்ப்பணிப்பை வலியுறுத்துவதோடு, டிஜிட்டல் பரிமாற்றம், டிஜிட்டல் பொருளாதாரம், வலுசக்தி மாற்றம், செயற்கை நுண்ணறிவு மற்றும் பாரம்பரிய துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும், புதிய ஈடுபாட்டு வழிகளைத் திறப்பதற்கும் பகிரப்பட்ட உறுதியை இது பிரதிபலிக்கின்றது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இலங்கையில் முதலீடு செய்ய வியட்நாமின் வின்குருப் குழுமத்துக்கு ஜனாதிபதி அழைப்பு

வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று சனிக்கிழமை பிற்பகல் வியட்நாமில் உள்ள வின்குருப் குழுமத்தின் உயர் நிர்வாகத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வின்குருப் குழும தலைமையகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இலங்கையில் ஆதன வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் முதலீடு செய்யுமாறு வின்குருப் குழுமத்துக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

வின்குருப் நிறுவனத்தின் வெற்றி மற்றும் பல்வகைப்பட்ட உலகளாவிய வர்த்தகநாமங்களின் உருவாக்கத்துக்கும் வாழ்த்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கையில் முதலீட்டுக்கு நெகிழ்வான மற்றும் உகந்த சூழலை உருவாக்குவதற்கு இலங்கை அரசு தயாராக உள்ளது என்று வலியுறுத்தினார்.

இலங்கையின் மூலோபாய புவியியல் இருப்பிடம், முற்போக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் குறிப்பாக சுற்றுலாத்துறை, ஆதன வர்த்தகம் ஆகிய அதிக திறன் கொண்ட துறைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கான அரசின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

டெக்னொகொம் கோர்ப்பரேஷன் என்று முன்னர் அழைக்கப்பட்ட வின்குருப் கூட்டு பங்கு நிறுவனம்,1993 இல் உக்ரைனில் நிறுவப்பட்டது. தற்போது, வின்குருப் பெயர் வியட்நாமில் மிகப் பாரிய மற்றும் மிகவும் மதிப்புமிக்க தனியார் நிறுவனங்களில் ஒன்றாகும்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், வின்குருப் குழுமத்தின் உப தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி வியட் குவாங் இரு நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உரித்தைப் பேணுவோம்!

வடக்கில் உரிமை கோரப்படாத - சட்ட ரீதியான உரித்தை நிரூபிக்க முடியாத - தரப்புகளின் காணிகளை அரசுடைமையாக்கி, அவற்றைக் கபளீகரம் செய்து சூறையாடும் தந்திரோபாயத் திட்டத்தை அரசு கனகச்சிதமாகவும் கபடத்தனமாகவும் முன் நகர்த்தி வருகையில் தமிழர்கள் தமது தாயகத்தில் தங்கள் தாய் மண்ணைக் காபந்து பண்ணுவதற்கு அதிக சிரத்தை எடுத்து, திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது விடயத்தில் விசேடமாகப் புலம்பெயர் தேசத்தில் இருப்பவர்கள் அதிக சிரத்தை கொள்வது அவசியமாகும்.

தமிழரின் தாயக மண்ணை அபகரிக்கும் அரசின் இந்த வஞ்சகத்தனத்துக்கு எதிராக முனைப்புடன் எதிர்வினையாற்றிவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் இவ்விடயத்தில் புலம்பெயர் தமிழர்களிடம் விநயமாக சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்.

புலம்பெயர் மக்களின் உரிய காணிகள் வடக்கில் இருந்தால் அவை தொடர்பில் அவர்கள் கட்டாயம் கவனம் எடுக்க வேண்டும் என சட்டத்தரணி சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

“புலம் பெயர் மக்களுக்கான அன்பான வேண்டுகோள். உங்களுடைய காணிகள் வடக்கில் இருந்தால் வந்து உங்களுடைய உரிமைகளைக் கோருங்கள். அவ்வாறு, உங்களால் வர முடியாத பட்சத்தில் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். உங்கள் சட்ட ரீதியான பிரதிநிதி மூலம் நீங்கள் அதைச் செய்யலாம். உங்களுக்கு இங்கு இருக்கும் காணிகள் மீது அக்கறை இல்லை என்றால் அதனை அரசுக்கு செல்ல விட வேண்டாம். குறைந்தபட்சம் காணி இல்லாத மக்களுக்கு அவற்றை எழுதிக் கொடுப்பதற்கான நடவடிக்கையையாவது மேற்கொள்ளுங்கள். எப்படியாவது எமது நிலங்களை எமது மக்களின் கையிருப்பில் இருப்பதற்கான நடவடிக்கையை உறுதிப்படுத்துங்கள்” என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் சொல்வது - சுட்டிக்காட்டுவது - யதார்த்தபூர்வமான விடயம்தான். வெளிநாடுகளில் வசதியாக வாழும் நம்மவர்கள் பலருக்கு இங்குள்ள நில புலன்கள், அவற்றின் பெறுமதிகள் அற்பமாக இருக்கலாம். அதனால் அவை குறித்து கவனம் எடுப்பதில் - சிரத்தை கொள்வதில் - அவர்களுக்கு ஈடுபாடு இல்லாமல் போகலாம். அவ்வாறு உதாசீனமாக நடப்பதன் மூலம் தமிழர் தாயக மண்ணை சிங்களத்திடம் தாரைவார்க்கும் கீழ்மைத்தனமான செயற்பாட்டுக்குத் தாங்கள் துணை போகிறார்கள் என்பதை அவர்கள் மறந்து விடக் கூடாது. தாயக மண்ணைத் துறந்து, வெளிநாட்டில் வசித்தாலும், தம் பூர்வீகத் தாய் மண் தொடர்பான வரலாற்றுக் கடப்பாட்டை நிறைவு செய்ய அவர்கள் தவறக்கூடாது.

மேலும் அரசு வர்த்தமானி மூலம் அறிவித்திருக்கும் காணிகளின் உரித்தாளர்கள் அவற்றின் உரிமைகளை நிரூபிக்கும் ஆவணங்களை - உறுதிகளை - தொலைத்திருந்தாலும் கூட, அவற்றின் பிரதிகளை காணிப் பதிவகங்களில் தேடிப் பெற முடியாவிட்டாலும் கூட, வெளிப்படுத்தல் உறுதி *(Deed Of Declaration)* ஒன்றை தமது சட்டத்தரணிகள் மூலம் விரைந்து பதிந்து, வர்த்தமானி அறிவித்தல் விதித்த காலக்கெடு தினத்துக்கு முன்னர் இத்தகைய காணிகள் மீதான தங்களின் உரித்தை நிரூபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளின் இத்தகைய சட்டப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு நம் சட்டத்தரணிகள் தாங்களாகவே முன்வந்து சட்ட உதவிக்கான தொண்டர் அமைப்பு ஒன்றை செயல்படுத்துவது இப்போதைய காலத்தின் கட்டாயமாகும். நமது சட்டத்தரணிகள் செய்வார்களா? பார்த்திருப்போம்.



# நுவரெலியாவில் பலத்த பாதுகாப்புடன் எடுத்துச்செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகள்

## 12 உள்ளூராட்சி சபைகளுக்கு 2 ஆயிரத்து 485 பேர் போட்டி

(க.கிஷாந்தன்)

நாளை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நுவரெலியா மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் அனைத்தும் நுவரெலியா காமினி சிங்கள வித்தியாலயத்தில் இருந்து வாக்குச் சாவடிகளுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் 300 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 610,117 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா மாநகர சபை, தலவாக்கலை லிந்துலை மற்றும் ஹட்டன், டிக்கோயா ஆகிய நகர சபைகளுக்கும், வலப்பனை, ஹங்குரன்கெத்த, நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை மற்றும் கொட்டகலை, அக்கரபத்தனை, நோர்வூட், மஸ்கெலியா ஆகிய பிரதேச சபைகளுக்குமான 540 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களில் 6352 பேர் கடமையாற்றவுள்ளதோடு, பாதுகாப்புக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாருமாக 1500 பேர் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர்.

12 சபைகளுக்கும், 300 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 2485 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# மட்டு. தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன





(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளை (06) இடம்பெறவுள்ள தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளும், வாக்குச் சீட்டுகளும் மாவட்டத்தின் பிரதான தேர்தல் மத்திய நிலையமான மட்டக்களப்பு இந்துக்கல்லூரி வளாகத்தில் இருந்து இன்று திங்கள்கிழமை (04) காலை பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன.

12 உள்ளூராட்சி சபைகளுக்காக இடம்பெறவுள்ள இந்தத் தேர்தலில் இந்த முறை மாவட்டத்தில் 447 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் தேர்தல் பணிகளுக்காக 6000 அரச ஊழியர்களும், ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிஸாரும் இந்த முறை தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாவட்டத்தின் தேர்தல் வாக்குகளை எண்ணுவதற்காக 144 வட்டார வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



# வாழைச்சேனையில் இடம்பெற்ற மங்கையர்க்கரசியார் குருபூசை!

**(கல்லடி செய்தியாளர்)**

"தமிழ் போற்றி சைவம் வளர்ப்போம்" எனும் தொனிப்பொருளில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசனை, வழிகாட்டலுக்கமைய கோறளைப்பற்று பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வாழைச்சேனை – விநாயகபுரம் ஸ்ரீபேச்சியம்மன் அறநெறிப்பாடசாலையும், மட்டக்களப்பு மாவட்ட சிவதொண்டர் திருக்கூட்டமும், நடராஜர் சைவசித்தாந்த பயிற்சி மையமும், உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் மற்றும் நலன் விரும்பிகளும் இணைந்து மங்கையற்கரசியார் குருபூசை நிகழ்வை நடத்தின.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (04) மட்டக்களப்பு விநாயகபுரம் விநாயகர் வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது.

அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி.வி.விக்னேஸ்வரியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிவதொண்டர் திருக்கூட்டத்தின் தலைவர் சிவதொண்டர் எஸ்.கமல்ராஜ், சிவதொண்டர் திருக்கூட்டத்தின் மாவட்ட, பிரதேச இணைப்பாளர் சிவதொண்டர் எஸ்.சுதர்சன், சிவதொண்டர் கா.ஜெயபாலன், சிவதொண்டர் எஸ்.பிரசன்னா மற்றும் கோறளைப்பற்று பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.பிருந்தாபன் மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், ஆலய பரிபாலன சபையினர்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆன்மீகச் சொற்பொழிவுகள், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திறமையை வெளிக்கொணரும் முகமாக கலாசார நிகழ்வுகள், சமயம் சார்ந்த போட்டிகள் அரங்கேற்றப்பட்டன.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. ஆசிரியர்கள் கௌரவிப்பு, மாணவர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தாய்த்தமிழ் உறவுகளுக்கு சிவதொண்டர்களால் சிவசின்னங்களும் அணிவிக்கப்பட்டன.






# பனைசார் ஏற்றுமதி 350 சதவீதமாக அதிகரிப்பு கள்ளின் கொள்முதல் பெறுமதி இரட்டிப்பாகும்

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் தெரிவிப்பு



(த.சுபேசன்)

பனைசார் ஏற்றுமதி குறிப்பிட்ட காலத்துக்குள் 350 சதவீதமாக அதிகரித்துள்ள நிலையில் பனங்கள்ளின் கொள்முதல் பெறுமதி இரட்டிப்பாகும் வாய்ப்புக் காணப்படுகிறது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

கொடிகாமத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் பனம் தொழிலாளர்கள் கள்ளை நிலத்தில் ஊற்றும் நிலை ஏற்படாது. கள்ளின் விலையை இரட்டிப்பாக்க பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுக்கும். இதனூடாகப் பனை சார் உற்பத்தியாளர்களுடைய வாழ்வு நிச்சயமாக மேம்படும்.

சகல பனந் தொழிலாளர்களும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் ஊடாக இதனைச் சாத்தியமாக்க முடியும்.

திக்கம் வடிசாலையை மீட்டது போன்று கைதடி, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் கிழக்கு மாகாணம் ஆகிய இடங்களிலும் தனியார் மயப்படுத்தப்பட்டிருக்கும் பனை சார் உற்பத்தித் தொழிற்சாலைகள் மீட்கப்பட்டு அவை மீளவும் பனை சார் சங்கங்களிடம் ஒப்படைக்கப்படும்.

கடந்த காலத்தில் பனைசார் உற்பத்தியாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. - என்றார்.






# கல்முனை வலய எல்லே சம்பியனாக நிந்தவூர் அல்-அஷ்றக் பாடசாலை தெரிவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கல்முனை வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை அணி, கல்முனை சாஹிராக் கல்லூரி, கல்முனை உவெஸ்லி ஆகிய அணிகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி அணியை எதிர்த்தாடி வெற்றி பெற்று, இந்த வருடத்துக்கான சம்பியனைச் சுவீகரித்துக்கொண்டது.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு இந்த வெற்றிக்காக ஆலோசனை வழிகாட்டலை வழங்கிய கல்லூரி முதல்வர் ஏ. அப்துல் கபூர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கிய பாடசாலை கிரிக்கெட் பொறுப்பாசிரியர் எம்.எஸ்.எம்.சாபீர், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஐ.எம். எஸ். இன்பாத் மௌலானா ஆகியோருக்கும் ஏனைய உடற்கல்வி ஆசிரியர்களான ரீ.எம்.தன்ஸீப், எம்.ஏ.எம். ஹிஜாஸ் அன்வர், எம்.எம்.எம். ஹாஸிக், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் எம்.ஐ. முஹம்மட் அஸ்மி, இணைப்பாட விதானத்துக்கு பொறுப்பான உதவி அதிபர் எம்.எம்.எம். உவைஸ், ஏனைய பிரதி உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மற்றும் வீரர்களின் பெற்றோர்கள் ஆகியோருக்கும் பாடசாலைச் சமூகம் நன்றி தெரிவித்துள்ளது.



# சாரணர் முகாமைத்துவ பயிற்சி!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை அல் உஸ்வா மீட்பு படையணியினர் அனர்த்த காலங்களில் சாரணர் முறைகள் மூலம் எவ்வாறு பொது மக்களை பராமரித்தல் தொடர்பான ஒரு நாள் செயலமர்வு சனிக்கிழமை (03) சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் அல் உஸ்வா இஸ்லாமிக் நலன்புரி அமைப்பும் இணைந்து 200 மணித்தியாலம் கொண்ட பயிற்சி நெறியை வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில், சாரணர் விதிமுறைகள், தலைமைத்துவ பயிற்சி, அனர்த்த காலங்களில் பொது மக்கள் தங்குவதற்கான முகாம் எவ்வாறு அமைத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் வழங்கப்பட்டதுடன், பயிலுனர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வளவாளர்களால் பதிலும், செயன்முறையும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுக்குச் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர் கலந்து கொண்டார். செயலமர்வுக்கு வளவாளராகவும், பயிற்சியாளர்களாகவும் ஓய்வு பெற்ற உணவு மருந்து பரிசோதகரும், சாரணர் பயிற்றுனர் தலைவருமான எஸ். தஸ்தகீர், சாரணர் பயிற்றுனர் தலைவர் எம். அப்துல் சலாம் (அதிபர்), உதவி பயிற்றுனர் தலைவர் மேஜர் கே.எம். தமீம், சாரணர் ஜனாதிபதி விருது பெற்ற ஐ.எம். இஹ்ஸாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# கொல்லைகளையும் எல்லைகளையும் பாதுகாத்துக்கொள்ளும் முக்கிய தேர்தல்!

நமது கொல்லைகளையும் எல்லைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் முக்கியமான தேர்தல் என்றால் அது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆகும்.

இலங்கையில் இன்று அந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெறுகிறது.

ஜனாதிபதி தேர்தலை விட நாடாளுமன்ற தேர்தலை விட மிக முக்கியமான காப்பரணாக கொள்ள வேண்டியது உள்ளூராட்சி சபை தேர்தல்தான்.

யாரின் வசம் இந்த உள்ளூராட்சி சபை இருக்க வேண்டும் எனத் தீர்மானிப்பவர்களும் அந்த அந்த வட்டார மக்களிடமே இருக்கின்றது. யாரின் வசம் இந்தச்செயல் திட்டங்கள் இருந்தால் கிராமமும் நகரமும் காக்கப்படும் என்ற விழிப்புணர்வு மக்களுக்கானதே.

இது அரசியலாளர்கள் மீதுள்ள அபிப்பிராயத்தையும் அல்லது கட்சிகள் மீதான கோபத்தையும் வெளிப்படுத்தும் சாதாரண தேர்தல் அல்ல இது.

உள்ளூராட்சி சபை தேர்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் உதாரணமாகப் பொதுக் கட்டடம் அமைத்தல் என்ற வரையறைக்குள் கோவில்கள் சனசமுக நிலையங்கள் மடங்கள் போன்றவை அமைக்கும் செயற்பாடுகளும் உள்ளன. எந்தக் கோவில் வரவேண்டும் எந்தக் கட்டடம் அமைக்கப்பட வேண்டும் என்ற சக்தியை நாம் தெரிவு செய்யப்போகும் கட்சிகளே தீர்மானிக்கும்.

அவ்வாறு தீர்மானிப்போரை மக்களாகிய நாம் தான் தெரிவு செய்யப் போகிறோம். எது தேவை என்பதைச் சரியாகத் தீர்மானிக்காவிடில் அதன் விளைவுகளும் ஆபத்தானவையே.

நாம் தெரிவு செய்யும் கட்சி எது என்பதைச் சரியாகத் தீர்மானிக்காதுவிடில் அந்த பொறுப்பற்ற தனம் நில அபகரிப்புக்கு இலகுவான வழிமுறைகளை கொடுத்துவிடும்.

ஏனையவற்றையும் ஒன்றோடு ஒன்று பொருத்தி விழிப்புணர்வை பெறுதல் அறிவுடைய பிரதேச மக்களின் சிறப்பாகும்.



வி.ரி.சகாதேவராஜா, காரைதீவு நிருபர்.

உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் ஒருவர் செய்ய முடியுமான செயற்பாடுகளுக்குள் பின்வருவன அமைகின்றன.

01.பொதுச் சுகாதாரம்.

02 .திண்மக் கழிவகற்றல்.

03. வீதிகளை அமைத்தலும் பராமரித்தலும்.

04. வடிகாலமைத்தல் மற்றும் பராமரித்தல்.

05 .வீதிகளுக்கு வெளிச்சம் தருதல்.

06. சிறுவர் பூங்காக்களை உருவாக்குதலும் பராமரித்தலும்.

07. விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

08.இடுகாடுகள்,சுடுகாடுகளை அமைத்தலும் பராமரித்தலும்.

09. நூலக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

10. பொது மல சல கூடங்களை அமைத்தலும்,பராமரித்தலும்.

11. கிராமிய நீர் விநியோகம்.

12. பொது நீராடல் நிலையங்களை அமைத்தல்.

13. தீயணைப்பு சேவைகள்.

14. தாய் சேய் நலப்பணி.

15. பிரதேசத்தை அழகுபடுத்தலும் சுத்தம் பேணலும்.

16. பொதுக் கட்டடங்களை நிர்மாணித்தலும் பராமரித்தலும்.

17. தொற்று நோய் தடுத்தல்.

18. திடீர் அனர்த்த முன்னாயத்தமும் செயற்பாடுகளும் .

19.அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்தல்.

20. கால்நடை பண்ணைகளை நடத்துதல்.

21. வறியோருக்கு நிவாரணம் வழங்கல்.

தொடர்ச்சி▼

# கொல்லைகளையும் எல்லைகளையும் பாதுகாத்துக்கொள்ளும் முக்கிய தேர்தல்!

தொடர்ச்சி▲

ஆக மொத்தத்தில் ஒரு வீட்டினுடைய சிறந்த அத்திவாரம் போல் அந்தந்த கிராமங்களுடைய நகரங்களுடைய சகல செயற்பாடுகளின் கருப் பொருள்களையும் தன்னகத்தே கொண்டது தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல்.

எமது பிரதேச வளங்களை – இருப்பதைப் பாது காத்தலும் வளப்படுத்தலும் ஆகும். அந்த இருப்பை யாரிடம் கொடுத்து பாதுகாக்கப்போகிறோம். அந்த இருப்பை யாரிடம் கொடுத்து அபிவிருத் திக்கு இட்டுச்செல்லப்போகிறோம். அந்த இருப்பு யார் கைவசம் இருப்பது ஏற்புடையது என்பதைப் புத்தியுள்ள மக்கள் தான் தீர்மானிப்பார்கள்.

பொறுத்திருந்து பார்ப்போம்.





# அம்பாறை மாவட்ட கடற்கரை கரப்பந்தாட்ட சாம்பியனாக காரைதீவு அணி வெற்றி வாகை

**(வி.ரி. சகாதேவராஜா)**

49 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் காரைதீவு பிரதேச செயலக அணி சாம்பியனாக வெற்றி வாகை சூடியுள்ளது.

காரைதீவு வரலாற்றில் முதல் முறையாக மாவட்ட மட்ட கடற்கரை கரப்பந்தாட்டத்தில் காரைதீவு பிரதேச செயலக அணியாக காரைதீவு விளையாட்டு கழகம் களத்தில் இறங்கி இந்த வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

மொத்தமாக 13 பிரதேச செயலக அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டி கல்முனை கடற்கரையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட மட்ட போட்டிகளின் கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் மகா ஓயா பிரதேச செயலக அணியுடன் மோதிய காரைதீவு பிரதேச செயலக பிரிவு சார்பாக கலந்து கொண்ட காரைதீவு விளையாட்டு கழகம் முதலிடம் பெற்று மாவட்ட சாம்பியனாகியது.

கழக உறுப்பினர்களான வரனுஜன் மற்றும் சதுசன் ஆகியோர் இந்த வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளனர்.

அடுத்து இவர்கள் மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்வார்கள்.

அம்பாறை மாவட்ட மட்ட போட்டியில் அம்பாறை மாவட்ட விளையாட்டு அதிகாரி அத்தீக் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களான சுலக்ஷன் பாஸ்கரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# மே தினத்தில் பெரண்டினாவின் சிரமதானம்!

**( வி.ரி.சகாதேவராஜா)**

சர்வதேச தொழிலாளர் தினத்தையும் பெரண்டினாவின் களுவாஞ்சிக்குடிக் கிளையின் 10 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டுச் சிரமதானம் நடைபெற்றது.

ஓந்தாச்சிமடம் மக்கள் மாலை வேளையில் ஓய்வெடுக்கும் கடற்கரைப் பகுதியை இந்தச் சிரமதான வேலைத்திட்டம் ஒன்றைச் செய்திருந்தனர்.



இதற்கு பெரண்டினா ஊழியர்கள் மற்றும் பெரண்டினா வாடிக்கையாளர்கள் களுதாவளை பிரதேச சபை ஊழியர்கள், மற்றும் பிரதேச செயலக கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மூன்று தசாப்தம் மேற்கு நாடுகளுக்காக அழுக்கு வேலை: பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் ஒப்புதல்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் பல வறிய நாடுகள் மேற்கு நாடுகளுக்காக "அழுக்கு வேலை" (Dirty Works) செய்து வந்ததாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் அதிரடியாக தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பாகிஸ்தான் கடந்த மூன்று தசாப்தங்களாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட மேற்கு நாடுகளுக்காக இந்த மோசமான அழுக்கு வேலையைச் செய்து வருகிறது என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃப் (Khawaja Asif) வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத அமைப்புகளை ஆதரித்ததையும், சோவியத் யூனியனுக்கு எதிராக முஜஹதீன் தீவிரவாதிகளை அமெரிக்கவுடன் இணைந்து ஆதரித்து வந்த விடயங்களையும் அப்பட்டமாக விமர்சித்துள்ளார்.

மேற்கத்திய நாடுகளுக்காக இந்த மோசமான வேலைகளை பாகிஸ்தான் செய்தது தவறு. அதற்காக நாங்கள் கடுமையாக துன்பப்பட்டோம் என்றும் கூறினார்.

இதன்மூலம் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவளிப்பதாக பாகிஸ்தான் அரசு ஒப்பு கொண்டுள்ளது. அதுமட்டுமின்றி அதனை அந்த நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப் ஒப்புக் கொண்டுள்ளார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

**பாகிஸ்தான் தொடர்பும் இந்திய பதிலடியும்!**

காஷ்மீர் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா, பாகிஸ்தான் மீது போர் தொடுக்கலாம் என்ற சூழல் நிலவிவரும் நிலையில், பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃப் இவ்வாறு பேசியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்தியா பாகிஸ்தானியர்களை தாக்கினால் இந்தியர்களை சும்மா விட மாட்டோம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் கடந்த 22 ஆம் திகதி தாக்குதல் நடத்தியதில் 29 பேர் பரிதாபமாக பலியாகினர். சுற்றுலா பயணம் மேற்கொண்டவர்கள் மீது துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்திய சம்பவம் இந்திய நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

பாகிஸ்தானில் உருவாகிய தீவிரவாத அமைப்பு இந்த கொடூர செயலில் ஈடுபட்டுள்ளது என தெரிய வந்த நிலையில், பாகிஸ்தான் மீது பல்வேறு தடை நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு உள்ளது.

காஷ்மீரில் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ள இந்தியா, 48 மணி நேரத்துக்குள் பாகிஸ்தானியர்கள் அனைவரையும் இந்தியாவிலிருந்து வெளியேற உத்தரவிட்டுள்ளது.

மேலும் சிந்து நதி ஒப்பந்தத்தை ரத்து செய்து பாகிஸ்தானுக்கு தண்ணீர் செல்வதை இந்தியா நிறுத்தியுள்ளது.



இந்த நிலையில் இந்தியாவின் செயல்பாடுகளுக்கு பதிலடி தருவதற்காக பாகிஸ்தான் வான்வெளியில் இந்திய விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிம்லா ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக பாகிஸ்தான் அரசும் அறிவித்தது. தொடர்ந்து எல்லையில் ராணுவ படைகளை பாகிஸ்தான் குவித்து வருகிறது. முப்படைகளும் தயாராக இருக்க அறிவுறுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள இந்தியர்களை வெளியேறுமாறு எச்சரித்துள்ளது. இதனால் தொடர்ந்து இரு நாடுகளுக்கிடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர், பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்த இந்திய ராணுவம் திட்டமிட்டு வருவதாக உளவுத்துறை மூலம் தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார். பாகிஸ்தானியர்களை இந்தியா தாக்கினால், இந்தியர்களும் பாதுகாப்பாக இருக்க முடியாது. நாங்கள் தற்காப்புக்காக தயார் நிலையிலேயே உள்ளோம். தக்க பதிலடி கொடுப்போம் என்றும் அவர் பேசியுள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான இஷாக் டார், இந்த கொடிய தாக்குதலில் பாகிஸ்தானின் தொடர்புக்கான ஆதாரங்களை முன்வைக்குமாறு இந்தியாவுக்கு சவால் விடுத்தார். இந்தியா மீண்டும் மீண்டும் பழி சுமத்தும் விளையாட்டை விளையாடியுள்ளது. மேலும் பஹல்காம் தாக்குதலில் பாகிஸ்தானின் தொடர்புக்கான ஆதாரம் இருந்தால், தயவு செய்து அதை எங்களுடனும் உலகத்துடனும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று தெரிவித்தார்.

**இஸ்ரேல் துணை நிற்கும்!**

விரைவில் பாகிஸ்தானுக்கு பதிலடி தாக்குதல் கொடுக்க இந்திய மத்திய அரசு தயாராகி வருகிறது. எல்லையில் ராணுவ வீரர்களை தயாராக வைத்துள்ளது. கடற்படை, விமானப்படையும் பயிற்சியை தொடங்கி உள்ளது. அதேவேளை, பாகிஸ்தான் கராச்சியில் ஏவுகணை பயிற்சியை தொடங்கி உள்ளது.

இரு நாடுகள் இடையே தற்போது போர் மேகங்கள்

தொடர்ச்சி▼








# மூன்று தசாப்தம் மேற்கு நாடுகளுக்காக அழுக்கு வேலை:
# பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் ஒப்புதல்!

**தொடர்ச்சி▲**

சூழ்ந்துள்ளன. இப்படியான சூழலில் தான் பாகிஸ்தான் மீது இந்தியா ராணுவ நடவடிக்கை எடுத்தால் இந்தியாவுடன் நாங்கள் துணை நிற்போம் என்று இஸ்ரேல் அதிரடியாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ஓரன் மார்மோர்ஸ்டீன் கூறியதாவது, பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ராணுவ நடவடிக்கை மேற்கொண்டால் நாங்கள் இந்தியாவுடன் நிற்போம்.

நண்பனுக்காக இன்னொரு நண்பன் இதை தான் செய்வான். நாங்கள் எப்போதும் இந்தியாவுடன் நிற்கிறோம். இது தான் இஸ்ரேலின் கொள்கை ரீதியான நிலைப்பாடு என தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்த “அழுக்கு வேலை”

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் தொலைக்காட்சி நேர்காணலில், கடந்த கால அரசுகள் முப்பது ஆண்டுகளாக தீவிரவாதிகளை ஆதரித்து வருவதாக அதிர்ச்சியூட்டும் வகையில் ஒப்புக்கொண்டுள்ளார். ஜம்மு-காஷ்மீரில் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு சில நாள்களுக்குப் பிறகு இந்த கருத்துக்கள் வந்துள்ளன.

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பை ஆதரிப்பதாக எழுந்த குற்றச்சாட்டு குறித்து கேட்டபோது, மேற்கு நாடுகளுக்கு நீண்ட காலமாக பாகிஸ்தான் “அழுக்கு வேலை” செய்வதாகக் கூறியதைத் தொடர்ந்து தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தார்.

அவர் ஸ்கை நியூஸ்க்கு அளித்த சூடான நேர்காணலின் போது ஆசிஃப் அளித்த ஆச்சரியமான ஒப்புதல் வாக்குமூலம் இதுவாகும். பேட்டியில், பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக பாதுகாப்பு நடவடிக்கைகளை விதித்ததற்காக புது டில்லியை ஆசிப் கடுமையாக சாடினார்.

பஹல்காம் பயங்கரவாதத்தை வளர்ப்பதில் பாகிஸ்தானின் நீண்ட வரலாறு குறித்த கேள்விகளைத் தவிர்க்க ஆசிப் முயன்றபோது, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட மேற்கு நாடுகளுக்காக இந்த மோசமான வேலையைச் செய்து வருகிறோம், என்றும் கடந்த காலத்தில் பயங்கரவாத அமைப்புகளை எவ்வாறு ஆதரித்தது என்பதையும் கூறினார். இந்தத் தாக்குதல் குறித்து பாகிஸ்தானும் கவலைப்பட்டது. இருப்பினும், அவர் தனது கூற்றிலிருந்து விரைவாக பின்வாங்கி, அத்தகைய குழுக்களை ஆதரிப்பது ஒரு தவறு என்று



பின்னர் வலியுறுத்தினார்.

அது ஒரு தவறு, அதனால் நாங்கள் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று அவர் மேலும் கூறினார். லஷ்கர்-இ-தொய்பாவின் கிளையான எதிர்ப்பு முன்னணி, பஹல்காம் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றதை முதலில் பாகிஸ்தான் அரசு இல்லை என்று கூறியது.

டெல்லியில் இருந்து வந்த எதிர்வினை எங்களுக்கு ஆச்சரியமாக இல்லை. இந்த முழு விடயமும் பிராந்தியத்தில், குறிப்பாக எங்களுக்கு ஒருவித நெருக்கடியை உருவாக்குவதற்காகவே அரங்கேற்றப்பட்டது என்பதை நாங்கள் இலகுவாக கண்டுபிடிக்க முடிந்தது.

சிந்து நீர் ஒப்பந்தத்தை இரத்து செய்தல் உள்ளிட்ட இந்தியாவின் சமீபத்திய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக ஆசிப் கூறினார்.

**பாகிஸ்தானும் பயங்கரவாதத்தால் பாதிப்பு**

பயங்கரவாத அச்சுறுத்தல்கள் பாகிஸ்தானிய அரசு திட்டவட்டமாகக் கண்டிக்கிறது. பாகிஸ்தான் பல தசாப்தங்களாக பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவில் இதுபோன்ற போக்கு தொடர்கிறது. இந்த முறை மீண்டும், குற்றம் சாட்டப்பட்ட தாக்குதலை யார் நடத்தினர் என்று தெரியவில்லை. அந்த அமைப்பைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை என்றும் அவர் கூறினார்.

தற்போது இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சரவைக் குழு பாகிஸ்தானுக்கு எதிராக ஐந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பிறகு இஸ்லாமாபாத் அரசும் 1972 சிம்லா ஒப்பந்தம் உட்பட இந்தியாவுடனான அனைத்து இருதரப்பு ஒப்பந்தங்களையும் நிறுத்தி வைப்பது உட்பட எதிர் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி தற்போது பதிலடி கொடுத்து வருகிறது.

# இந்தியா - பாகிஸ்தான் போர் பதற்றம்; ஐ.நா பாதுகாப்பு சபை இன்று கூடுகிறது



பஹல்காம் தீவிரவாத தாக்குதலை அடுத்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், இன்று ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் கூடுகிறது. இதில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் தரப்பில் முக்கிய விவகாரங்கள் இடம்பெறவுள்ளன என எதிர்பார்க்கப்படுகிறது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை அடுத்து இரு நாடுகளும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. இதில் சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக இந்தியா அறிவித்துள்ளது. இது சட்டவிரோத நடவடிக்கை என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை ஞாயிற்றுக்கிழமை அன்று கூறியது. இந்த நடவடிக்கை காரணமாக தங்கள் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எழுந்துள்ளதாக தெரிவித்தது.

மேலும், இந்தியாவின் நடவடிக்கை குறித்து உலக அமைப்பை அணுக உள்ளதாக பாகிஸ்தான் அறிவித்தது. இந்த சூழலில் தான் ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் இன்று கூடுகிறது.

முன்னதாக, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான பதற்றமான சூழல் குறித்து கவலை தெரிவித்திருந்தது ஐ.நா. “உலகில் தீவிரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் நாங்கள் கண்டிக்கிறோம். இது கொள்கை ரீதியான விஷயம். தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். தெற்கு ஆசிய பகுதியில் அமைந்துள்ள இரண்டு பெரிய நாடுகளான இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றம் குறித்து நாங்கள் கவலை அடைந்துள்ளோம். பாகிஸ்தானை விட இந்தியா பெரியது” என்று ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் மே மாதத்துக்கான தலைவர் எவாஞ் சலோஸ் செகெரிஸ் கூறியிருந்தார்.

கடந்த 22 ஆம் திகதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பாகிஸ்தானில் உள்ள இந்தியர்கள் மற்றும் இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்களின் விசா ரத்து செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தாயகம் திரும்பி உள்ளனர். இந்த சூழலில் இரு நாடுகளுக்கு இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# மீனவர்களின் படகுகளை அழிக்க இலங்கை திட்டம்

## மத்திய அரசு மீட்க ராமதாஸ் கோரிக்கை



தமிழக மீனவர்களின் படகுகளை உடைத்து ஆழ்கடலில் மூழ்கடிக்க இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதாக செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்ற நிலையில், மத்திய அரசு தலையிட்டு படகுகளை மீட்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று தனது எக்ஸ் பக்கதில் பதிவிட்டுள்ள அறிக்கையில்,

“இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்து வைக்கப்பட்டுள்ள படகுகளில் 34 படகுகளை உடைத்து ஆழ்கடலில் மூழ்கடிக்க சிங்கள அரசு திட்டமிட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன. தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்கும் நோக்குடன் இலங்கை அரசு செயல்படுத்தவுள்ள இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

இலங்கை அரசின் மீன்வளம் மற்றும் கடல்வளத்துறை சார்பில் அந்நாட்டு அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள பரிந்துரையில், இலங்கை கடல் பகுதியில் மீன்வளத்தைப் பெருக்கும் நோக்குடன் ஆழ்கடலில் செயற்கையான பவளப்பாறைகளை வளர்க்கலாம்; இதற்காக முதற்கட்டமாக 34 படகுகளை உடைத்து மூழ்கடிப்பதன் மூலம் பவளப்பாறைகளை எளிதாக வளர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசின் முதன்மை நோக்கம் பவளப்பாறைகளை வளர்த்து மீன்வளத்தைப் பெருக்குவது என்பதை விட, தமிழக மீனவர்களின் படகுகளை சிதைத்து, அவற்றை அவர்களுக்கு ஒருபோதும் கிடைக்கச் செய்யாமல் தடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக ஒழிப்பது தான். இலங்கை அரசின் இந்தத் திட்டம் செயல்வடிவம் பெற்றால் தமிழக மீனவர்கள் வாழ வழியின்றி வாட நேரிடும்.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை ஆண்டுக்கணக்கில் சிறை வைப்பது, கோடிக்கணக்கில் அபராதம் விதிப்பது, படகுகளை பறிமுதல் செய்வது என தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களை அழிக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிங்கள அரசு, அதன் அடுத்தக் கட்டமாகத் தான் படகுகளை சிதைத்து மூழ்கடிக்கும் திட்டத்தை செயல்படுத்தத் துடிக்கிறது.

2021ஆம் ஆண்டில் தொடங்கி இன்று வரையிலான நான்காண்டுகளுக்கும் கூடுதலான காலத்தில் தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 174 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 34 படகுகளை அழிக்கத் திட்டமிட்டுள்ள இலங்கை அரசு, அடுத்தடுத்தக் கட்டங்களில் மீதமுள்ள படகுகளையும் அழிக்க முனையும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு, தமிழக மீனவர்களின் படகுகளை அழிக்கும் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன் இலங்கை அரசிடம் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று அவர் தெரிவித்துள்ளார்.



# வெளிநாட்டு திரைப்படங்களுக்கு 100 சதவீத வரி; ட்ரம்ப் தீர்மானம்

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர், பல்வேறு வரிவிதிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

தற்போது ட்ரம்ப்பின் பார்வை திரைப்படத்துறை மீது திரும்பி உள்ளது.

அதன்படி வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.

அமெரிக்க திரைப்படத்துறை வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதால், இந்த வரிவிதிப்பை உடனடியாக செயற்படுத்துமாறு வணிகவரித்துறை மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுக்கு டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மீண்டும் திரைப்படத் தயாரிப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும், அதற்கு ஆதரவைக் காட்டும் விதமாக, பிற நாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கான வரிகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# தங்க சுரங்கத்திலிருந்து 13 சடலங்கள் மீட்பு



பெரு தலைநகர் லிமாவில் உள்ள தங்கச் சுரங்கமொன்றில் இருந்து 13 தொழிலாளர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சுரங்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்த குற்றக் கும்பலால் இந்த தொழிலாளர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த குற்றக்கும்பலை சேர்ந்தவர்கள் கடத்தப்பட்டவர்களை பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்ததுடன், அவர்களது குடும்பத்தினரையும் அச்சுறுத்தினர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அல்காட்ராஸ் சிறைச்சாலையை மீண்டும் திறக்க ட்ரம்ப் உத்தரவு

அமெரிக்காவின் மிகவும் பிரபலமான சிறைச்சாலைகளில் ஒன்றான அல்காட்ராஸ் சிறைச்சாலையை மீண்டும் திறக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

கொடூரமான குற்றவாளிகளை அடைத்து வைக்கப் பயன்படுத்தப்படும் இந்த சிறைச்சாலை, கலிபோர்னியா கடற்கரையில் உள்ள ஒரு தீவில் அமைந்துள்ளது.

1963 ஆம் ஆண்டில் பராமரிப்பு செலவுகள் மற்றும் கட்டடங்களின் பழுதுகள் காரணமாக மூடப்பட்ட இந்த சிறைச்சாலை, தற்போது சுற்றுலாத் தலமாக செயல்படுகிறது.



அமெரிக்காவில் வன்முறை அதிகரித்து வருவதால், குற்றவாளிகளைத் தனிமைப்படுத்துவதற்காக அல்காட்ராஸை கட்டமைத்து, விரிவுபடுத்தி மீண்டும் திறக்க அமெரிக்க ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு

பக்கம் 02

திங்கட்கிழமை 05/05/2025

## 50 வயதானதும் விவாகரத்து செய்யும் கனேடியர்

கனடாவில் 50 வயது தாண்டியவர்கள் விவாகரத்து செய்வது அதிகரித்து வருவது தெரிய வந்துள்ளது.

இப்படி 50 வயதுக்கு மேல் விவாகரத்து செய்வது, 02



# கனடாவில் மோடியின் உருவபொம்மையை கூண்டில் வைத்து காலிஸ்தானியர்கள் பேரணி

**கனடாவில் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட இந்திய தலைவர்களை கூண்டில் வைத்து காலிஸ்தான் குழுவினர் பேரணியாகச் சென்றுள்ளனர்.**

**மேலும், கனடாவில் உள்ள இந்துக்களை நாடுகடத்த வேண்டும் என்று முழக்கம் எழுப்பியதால் அந்நாட்டில் வாழும் இந்துக்கள் இடையே பதற்றமான சூழல் நிலவுகிறது.**

**டொராண்டோவில் உள்ள மால்டன் குருத்வாரா என்ற பகுதியில் ஹிந்துக்களுக்கும் இந்திய அரசுக்கும் எதிராக காலிஸ்தான் குழுவினர்ஞாயிற்றுக்கிழமை பேரணி நடத்தியுள்ளனர்.**

இதுதொடர்பான விடியோவை பகிர்ந்த கனடா இந்து வர்த்தக சபை அமைப்பினர் கண்டனத்தை பதிவிட்டுள்ளனர்.

"கனடாவில் 800,000 ஹிந்துக்களும் 18.6 லட்சம் இந்திய வம்சாவளியினரும் வசித்து வருகின்றனர். தற்போது இந்துக்களை குறிவைத்து பேரணி நடத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற ஆபத்தான போராட்டத்துக்கு அனைத்து தலைவர்களும் கண்டனம் தெரிவிக்க வேண்டும்" என்று இந்து வர்த்தக சபை கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், இந்த பேரணியை கனடாவில் தாக்குதல்களை நடத்தும் 'கே-கேங்' என்ற காலிஸ்தான் அமைப்பினர் நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 02

# இரண்டு லட்சம் டொலர் பெறுமதியான போதைப் பொருளுடன் 2 பேர் கைது

கனடாவின் தென் ஒன்றாரியோ வில் இரண்டு லட்சம் டொலர் பெறு மதியான போதைப் பொருள்களுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென் ஒன்றாரியோவில் சில மாதங்களாக நீடித்த போதைப்பொருள் கடத்தல் விசாரணையின் முடிவாக, இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நொட்டவாசாகா பொலிஸ் அதிகா ரிகள் கடந்த ஆண்டு இந்த விசார ணையைத் தொடங்கினார்கள்.

இந்த வாரம் புதன்கிழமை மற்றும் வியாழன் கிழமையன்று, பாரி, ஆரஞ்ச்வில், பிராம்டன், செர்சில் மற்றும் நயாகரா நீர்வீழ்ச்சி பகுதிகளில் ஒருசில வீடுகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

ஒன்றாரியோ பொலிஸாருடன் பல்வேறு நகர பொலிஸாரும் இணைந்து கொண்டு விசாரணை களை முன்னெடுத்திருந்தனர்.

இந்த சோதனைகளில் 2,000 கிரா முக்கும் அதிகமான கொக்கெயின் மற்றும் 02



# க்யூபெக் மாகாண பாடசாலைகளில் அலைபேசி பயன்பாட்டுக்குத் தடை

எதிர்வரும் கல்வியாண்டு முதல் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் அலைபேசிகளை முற்றிலுமாக தடை செய்யப்படும் என க்யூபெக் மாகாணஅரசாங்கம் அறிவித்துள்ளது.

2024 ஜனவரியிலிருந்து வகுப்பறைகளுக்குள் செல்போன் பயன்பாடு ஏற்கனவே தடை செய்யப்பட்டிருந்த நிலையில், இப்போது இந்த புதிய நடவடிக்கை பள்ளியின் தொடக்கம் முதல் நிறைவு, இடைவேளைகள் மற்றும் பள்ளி வளாக மைதானத்தில் கூட பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் பெர்னார்ட் டிரைன்வில் (Bernard Drainville) எதிர்பார்க்கப்படுகிறார்.

ஊடகத்திற்கும் சமூக ஊடகங்களுக்கும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் உடல்-மன நலத்தில் ஏற்படும் பாதிப்புகளை ஆய்வு செய்யும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளில் முதலாவதாகும்.



அந்த குழுவின் முதல்கட்ட அறிக்கை ஏப்ரல் 22 அன்று தாக்கல் செய்யப்பட்டது. அப்போது அமைச்சர் டிரைன்வில், “இந்த அறிக்கையை மிகுந்த ஆர்வத்துடனும் திறந்த மனதுடனும் ஏற்கிறேன்” எனக் குறிப்பிட்டிருந்தார்.



## 50 வயதானதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

grey divorce என அழைக்கப்படுகிறது.

சமீப காலமாக இப்படி 50 வயதை தாண்டியவர்கள் விவாகரத்து செய்வது அதிகரித்துள்ளதாக கருதப்பட்டாலும், ஒருவகையில் பார்த்தால், விவாகரத்து மன நிலைமை எப்போதுமே இருந் துள்ளது என்றும் கூறலாம்.

ஏனென்றால், 1986 இல் சராசரி திரு மண வயது 25. தம்பதியர் சராசரியாக 13 ஆண்டுகள் இணைந்து வாழ்ந்தார்கள்.

2020 இல் சராசரி திருமண வயது 31. தம்பதியர் சராசரியாக 15 ஆண்டுகள் இணைந்து வாழ்கிறார்கள். ஆக, விவா கரத்து செய்யும் வயது சுமார் 50 ஆக உயர்ந்துள்ளது எனலாம்.

இப்படி 50 வயதுக்கு மேல் விவா கரத்து செய்வதற்கு பல காரணங்கள் உள்ளன. மனிதனின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது, சொந்தக்காலில் நிற்கும் அளவுக்கு வசதி, குறிப்பாக பெண்களிடையே.

விவாகரத்து செய்தவர்கள் சமுதா யத்தில் இகழ்வாக பார்க்கப்பட்ட நிலை மாறியுள்ளதும் ஒரு முக்கிய காரணம்.

ஆக, தங்கள் தற்போதைய உறவு தங்கள் தேவைகளை சந்திக்க வில்லை யென்றால், அதை விட்டு விட்டு புதிய வாழ்வை துவக்க இப்போது தயங்கு வதில்லை மக்கள்.

இப்படி 50 வயதுக்கு மேல் விவா கரத்து செய்துகொள்வதால் நிதி நிலைமை உட்பட பல பிரச்சினைகள் உள்ளன என்பதை மறுக்கமுடி யாது.

ஆனால், தங்கள் தனிப்பட்ட நிறை வான மற்றும் மகிழ்ச்சியான புதிய வாழ்வை ஒப்பிடும்போது, இந்த கஷ் டங்கள் எல்லாம் பெரிதாக தெரி வதில்லை என்கிறார்கள் அந்த பாதை யில் பயணிக்கும் பலர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பேரணிக்கு கண்டனம் தெரி வித்துள்ள கனடா பத்திரிகையாளர் டேனியல் போர்ட்மேன் ,

”எங்கள் தெருக்களில் வன்முறை யில் ஈடுபடும் ஜிஹாதிகள், காணும் யூதர்களை எல்லாம் அச்சுறுத்தும் வகையில், சமூகக் கட்டமைப்புக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

ஆனால், காலிஸ்தான் குழுக்கள் இயங்குவதற்கு வெளிநாடுகளில் இருந்து நிதி அளிக்கப்படுகிறது. காலிஸ்தானியர்களை கையாள்வதில் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விலிருந்து மார்க் கார்னி மாறுபட்ட வராக இருப்பாரா?” என்று கேள்வி களஎழுப்பியுள்ளார்.

கனடாவில் இந்துக்களுக்கு எதிராக காலிஸ்தான் குழுவினரின் தொடர் போராட்டங்கள் மற்றும் அச்சுறுத்தல்க ளால் இரு நாடுகளுக்கு இடையேயான உறவு பாதிக்கப்பட்டது.

காலிஸ்தான் அமைப்புகளுக்கு ஆதரவு அளித்து வந்த லிபரல் கட்சித் தலைவரும் பிரதமருமான ஜஸ்டின், கட்சிக்குள் ஆதரவை இழந்ததால் பதவிக் காலம் முடிவதற்கு முன்னதா கவே இராஜினாமாசெய்தார்.

இதனைத் தொடர்ந்து, லிபரல் கட் சித் தலைவராகவும் கனடாவின் பிரத மராகவும் பொறுப்பேற்ற மார்க் கார்னி, நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை சந்தித்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மீண்டும் லிபரல் கட்சி வெற்றி பெற்ற நிலையில், மார்க் கார்னி பிரதமரானார்.

இந்த நிலையில், மார்க் கார்னி மீண்டும் பிரதமராகி ஒரு வாரத்துக்குள் இந்துக்களுக்கு எதிராக காலிஸ்தானி யர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட இந்திய தலைவர்களின் உருவ பொம் மைகளை கைதிகளைப் போன்று சித்த ரித்து கூண்டுக்குள் வைத்து பேர ணியாக அழைத்துச் செல்லப்பட்டதற்கு கண்டனங்கள் எழுந்துள்ளன.

## இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

100 கிராமுக்கும் அதிகமான பெண் டனில் பறிமுதல் செய்யப்பட்ட தாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் சந்தை மதிப்பு இரண்டு லட்சம் கனடிய டொலர் என பொலி ஸார் உறுதி செய்துள்ளனர்.

இந்த விசாரணையில், ஆரஞ்ச்வில் லைச் சேர்ந்த 37 வயதான ஆண் மற்றும் பாரியைச் சேர்ந்த 32 வயதான பெண் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவருக்கும் கொக்கெயின் மற் றும் பெண்டனில் வைத்திருத்தல் மற் றும் கடத்தல் குற்றச்சாட்டுகள் சுமத் தப்பட்டுள்ளன.

மேலும், அந்த ஆணுக்கு பிணை உத்தரவை மீறிய குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.